1981 மே 7]

எப்படி மானியம் நூற்றுக்கு நூறு சதவீதம் மானியமாகக் கொடுத்து வந்தார்களோ அப்படியே கொடுக்க வேண்டுமென்று தான் நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். முதலிலே இருந்ததை Central Sector Schemes என்கின்ற அளவிலே இருந்ததை இப்பொழுது Centrally Sponsored schemes என்று மாற்றியிருக்கிறார்களே அதுவும் கூட மாற்றப்படக்கூடாது. Central Sector Schemes ஆகத்தான் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும்கூட நாம் கேட்டு கொண்டிருக்கிறோம்.

குஜிலியம்பாறை நகரில் பேருந்து நிலையம் கட்டும்பணி

*வினா எண். 778—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தாலுகா, குஜிலியம்பாறை நகரில் பேருந்து நிலையம் கட்டுவதில் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பேருந்து நிலையம் கட்ட ரூ. 1 இலட்சத்திற்கான மதிப்பீடு 1976-ல் தயாரிக்கப் பட்டது. 1979-ல் நெடுஞ்சாலை மேற்பார்வைப் பொறியாளர் அங்கீகாரம் அளித்தபோது மதிப்பீட்டுத் தொகையை ரூ. 1·25 இலட்சமாகத் திருத்தியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பேரூராட்சியின் அனுமதி 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதியில் அளிக்கப்பட்டது. இந்த வேலை ஆரம்பித்து இப்போது நடந்து வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குஜிலியம்பாறை நகரில் பேருந்து நிலையம் அமைகின்ற பணி பல ஆண்டுகளாகக் காலதாமதம் ஆகிக்கொண்டே வருகிறது. பல்வேறு கட்டங்களில் அதிகாரிகள் உறுதிமொழி அளித்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவில் 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் இந்தப் பணி முடிக்கப் படும் என்று தெரிவித்தார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் இதை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட பதிலிலும்கூட 31—3—1981-க்குள் வேலையை முடிப்பதாகத்தான் தெரிவித்திருந்தார்கள். ஆகவே, 31—3—1981 முடிந்து, 30—4—1981 முடிந்து, இப்பொழுது

5-வது மாதத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எவ்வளவு சீக்கிரமாக அந்த வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக, அதிலும் குறிப்பாக இன்னும் இரண்டு மாதங்களில்—நான் இந்த மன்றத்திலேயே உறுதி அளிக்கிறேன், இன்னும் இரண்டு மாதங்களில் அந்த வேலை கண்டிப்பாக முடிக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பாகப் பேரூராட்சிகளில் கட்டப்படுகின்ற இந்தப் பேருந்து நிலையங்களில் கடைகளுக்கான வசதியில்லாத காரணத்தினால் பயணிகள் தங்குவதற்குக் கட்டப்படும் இடங்களிலேயே வியாபாரம் செய்கின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தில் கடைகள் கட்டுவதற்கும் திட்ட மதிப்பீடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் கடைகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பேருந்து நிலையங்கள் கட்டப்படுகின்ற நேரத்தில் வருமானத்தின் அடிப்படையிலேயும் கூட பேருந்து நிலையங்களில் கடைகள் சேர்த்துக் கட்டப்பட வேண்டுமென்ற திட்டத்தைத் தான் நாம் இப்பொழுது அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்திலேயும் கூட கடைகள் கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

சிவகாசி—விருதுநகர் சாலையினைச் செப்பனிடும் பணி

*வினா எண். 779—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சிவகாசி விருதுநகர் சாலையை செப்பனிட இந்த நிதியாண்டில் 18 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை இன்னும் ஆரம்பிக்கப் படாததின் காரணம் என்ன ?

(இ) அந்தச் சாலையில் விரைவாகப் பாலம் ஒன்று கட்டித் தரப்படுமா ?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : (அ) (ஆ) மற்றும் (இ) சிவகாசி-விருதுநகர் சாலையை ரூ. 14.00 இலட்சம் செலவில் செப்பனிட அரசு ஆணை எண். 150 நாள் 5—2—1981ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் பாலம் கட்டுவதற்கான ஆணை அடுத்த நிதியாண்டில் பிறப்பிக்கப்படும்.